# மாணவர்களுக்கு முன்னாள் மாணவர்கள் $550,000 உதவி

தேவை உள்ள இளநிலை பட்டப் படிப்பு மாணவர்களுக்காக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழ கத்தின் கலைகள் மற்றும் சமூக அறிவியல் துறை முன்னாள் மாணவர்கள் $550,000 திரட்டி இருக்கிறார்கள்.

பல்கலைக்கழகத்தின் இந்தத் துறையின் 90வது ஆண்டைக் குறிக்கும் வகையில் புதிய இளநிலை பட்டப்படிப்பு உபகாரச் சம்பள நிதி தொடங்கப்பட்டு உள்ளது. நிதி திரட்டுவதற்காக நேற்று அறப்பணி கோல்ஃப் விளையாட்டு நடந்தது.

ஓய்வு பெற்ற மூத்த அமைச்சர் கோ சோக் டோங் இந்தத் துறை யில் 1994ல் படித்தவர். அவர் 140 முன்னாள் மாணவர்கள், ஆதரவு நிறுவனங்கள், கொடை யாளர்களுடன் செந்தோசா கோல்ஃப் திடலில் கோல்ஃப் விளையாடினார்.

அதைத் தொடர்ந்து விருந்தும் பரிசளிப்பு விழாவும் நடந்தன. அந்த விருந்தில் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்ட திரு கோ முன்னிலையில் காசோலை ஒப்படைக்கப்பட்டது. அந்த அறப் பணி நிகழ்ச்சிக்கு முன்னாள் மாணவர்களும், நிறுவனங்களும், அமைப்புகளும் பேராதரவு நல் கின.

இந்தத் துறையின் 90வது ஆண்டுவிழாவைக் கொண்டாட இதைவிட சிறந்த வழி இருக்க முடியாது என்று பல்கலைக்கழ கத்தின் கலைகள் மற்றும் சமூக அறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் ராபி கோ தெரிவித் தார்.

திரண்டுள்ள தொகை மூலம் நாளைய உலக குடிமக்களைச் சிறப்பான முறையில் பேணி உரு வாக்க உதவி கிடைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.